# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1945/2 - 2015 දෙසැම්බර් මස 14 වැනි සඳුදා - 2015.12.14

*1945/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்**

22 மற்றும் 26 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம், 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் 01.01.2016 இல் இருந்து அமுலுக்கு வருமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதனைப் போன்று திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
2015, திசெம்பர் 14.

**ஒழுங்குவிதிகள்**

(1) 2015, மே 18 ஆந் திகதிய 1915/2 ஆம் இலக்க, 2010, நவெம்பர் 19 ஆந் திகதிய 1680/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் என்பனவற்றின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட, 2010, யூலை 12 ஆந் திகதிய 1662/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், இது தொடர்பான அட்டவணைகள் இத்தால் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது :-

(அ) அட்டவணை I இன் "அ", "ஆ" மற்றும் "இ" வகுதிகள் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக கீழ் வரும் அட்டவணை I இன் "அ", "ஆ" மற்றும் "இ" வகுதிகள் பதிலீடு செய்யப்படுகின்றன.

**அட்டவணை I**

**வகுதி - அ**

(ஒழுங்குவிதி 4)

**உள்வரும் சர்வதேச அழைப்புகள் மீது செலுத்தவேண்டிய அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப்பகுதி | கட்டணம் (நிமிடமொன்றுக்கு ஐ. அ. டொ. சதத்தில்) |
|---|---|---|
| 2016 | 2016.01.01 - 2016.12.31 | 12.00 |
| 2017 | 2017.01.01 - 2017.12.31 | 12.00 |
| 2018 | 2018.01.01 - 2018.12.31 | 12.00 |

### வகுதி - ஆ

(ஒழுங்குவிதி 5)

**உள்வரும் உள்நாட்டு பெறுகைக் கட்டணம் என்ற வகையில் அறவீட்டுச் செலவின வீதம்**

| வருடம் | காலப்பகுதி | கட்டணம் (நிமிடமொன்றுக்கு ஐ. அ. டொ. சதத்தில்) |
|---|---|---|
| 2016 | 2016.01.01 - 2016.12.31 | 6.00 |
| 2017 | 2017.01.01 - 2017.12.31 | 6.00 |
| 2018 | 2018.01.01 - 2018.12.31 | 6.00 |

### வகுதி - இ

(ஒழுங்குவிதி 5, 7 மற்றும் 8)

**தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் என்ற வகையில் செலவின அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப்பகுதி | கட்டணம் (நிமிடமொன்றுக்கு ஐ. அ. டொ. சதத்தில்) |
|---|---|---|
| 2016 | 2016.01.01 - 2016.12.31 | 6.00 |
| 2017 | 2017.01.01 - 2017.12.31 | 6.00 |
| 2018 | 2018.01.01 - 2018.12.31 | 6.00 |

(2) 2015, மே 18 ஆந் திகதிய 1915/2 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதி மீது மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பில் வெளியிடப்பட்ட, 2010, நவெம்பர் 19 ஆந் திகதிய 1680/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், இது தொடர்பான அட்டவணைகள் இத்தால் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகிறது:-

(அ) அட்டவணை I இன் வகுதி அ (i) மற்றும் ஈ வகுதிகள் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்வரும் அட்டவணை I இன் வகுதி அ (i) மற்றும் ஈ பகுதிகள் பதிலீடு செய்யப்படுகின்றன.

### அட்டவணை I

### வகுதி - அ (i)

(ஒழுங்குவிதி 4அ, 7,8)

**குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கான கட்டணம் மீதான உள்வரும் சர்வதேச அழைப்புகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப்பகுதி | தொலைபேசி இலக்கமொன்றுக்கு/ மாதமொன்றுக்கான கட்டணம் (ஐ. அ. டொ.) | மாதமொன்றுக்கு 1,500 நிமிடங்களுக்கு மேற்படும் போதான அறவீடு (ஐ. அ. டொ. சதம்) |
|---|---|---|---|
| 2016 | 2016.01.01 - 2016.12.31 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் 6.00 |
| 2017 | 2017.01.01 - 2017.12.31 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் 6.00 |
| 2018 | 2018.01.01 - 2018.12.31 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் 6.00 |

### வகுதி - ஈ

(ஒழுங்குவிதி 9,9அ)

**உள்நாட்டு பெறுகை வெளிச்செல்லல் அழைப்புக்கள் கட்டணம் மீதான கொடுப்பனவு அறவீட்டு வீதம்**

| வருடம் | காலப்பகுதி | (நிமிடமொன்றுக்கான கட்டணம் (இலங்கை ரூபாவில்) |
|---|---|---|
| 2016 | 2016.01.01 - 2016.12.31 | 3.00 |
| 2017 | 2017.01.01 - 2017.12.31 | 3.00 |
| 2018 | 2018.01.01 - 2018.12.31 | 3.00 |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.